## எதிர்க்கட்சிகள் பலவீனம் அடைந்துள்ள நிலையில்

# தி.மு.க. கூட்டணியே மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும்!

## ‘தி இந்து’ ஆங்கில நாளேட்டின் ஆணித்தரமான கருத்து!

**சென்னை, டிச.4-**

**எதிர்க்கட்சிகள் பலவீனம் அடைந்துள்ள நிலையில் தி.மு. கழகக் கூட்டணியே மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் என்று ‘தி இந்து’ ஆங்கில நாளேடு ஆணித்தரமான கட்டுரை வெளியிட்டுள்ளது.**

**இதுகுறித்து ‘தி இந்து’ ஆங்கில நாளிதழில் நேற்று முன்தினம் (2.12.2025) வெளிவந்துள்ள சிறப்புக் கட்டுரை வருமாறு:-**

‘The AIADMK is on a weak footing’ எனும் தலைப்பில் ‘தி இந்து’ நாளிதழ் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், தமிழ்நாட்டில், அடுத்த ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பழனிசாமியுடன் ஏற்பட்ட மோதல் காரணமாக அ.தி.மு.க.முக்கிய நிர்வாகி ஒருவர் அக்கட்சியில் இருந்து விலகி வேறு கட்சியில் இணைந்ததும், இதனால், அ.தி.மு.க.செல்வாக்கு உள்ள பகுதிகளில் அக்கட்சி மேலும் பலவீனப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



The AIADMK is on a weak footing

With the party's woes continuing, the DMK seems to firmly be in the driver's seat

STATE OF PLAY

T. Ramakrishnan
ramakrishnan.t@thehindu.co.in

Last week, veteran leader K.A. Sengottaiyan, who was formerly with the All India Dravida Munnetra Kazhagam (AIADMK), joined the Tamilaga Vettri Kazhagam (TVK) led by actor Vijay in Tamil Nadu, which is set to go to the polls next year.

Mr. Sengottaiyan, who is a former Transport and School Education Minister, was expelled from the AIADMK about a month ago. He felt sidelined by party general secretary Edappadi K. Palaniswami and resigned from his post as MLA of Gobichettipalayam constituency in Erode district before joining the fledgling TVK.

The move did not surprise many people. Mr. Sengottaiyan had only two options: to either walk over to the ruling Dravida Munnetra Kazhagam (DMK) or join the TVK. He would have probably found the first option unacceptable, having been trained in anti-DMK politics for years. When there was pandemonium in the Tamil Nadu Assembly on March 25, 1989, the then Chief Minister M. Karunanidhi, alleged that Mr. Sengottaiyan had hit his face and broken his spectacles. On the same day, AIADMK supremo and the Leader of the Opposition, Jayalalithaa, too, was attacked. When she attempted to exit the Assembly during the melee, a DMK Minister held the end of her sari. Against such a backdrop, joining the TVK was Mr. Sengottaiyan's best option as Mr. Vijay has, from the beginning of his political career, presented himself as a critic of the DMK.

Tamil Nadu

...yan's critics feel that the senior leader has lowered his stature by joining the TVK, a recent entrant into the political arena, the former Minister, who was elected to the Assembly nine times since 1977, will be an asset to the TVK. There is no leader in the TVK who can match Mr. Sengottaiyan's experience in politics and election management. Mr. Sengottaiyan has been appointed the chief coordinator of TVK's high-level administrative committee and organisation secretary for four western districts, traditionally known as AIADMK strongholds. By making him in charge of four districts, Mr. Vijay has signalled that he, like the DMK, is going to make things difficult for the principal Opposition party in the elections.

The woes of the AIADMK seem to continue: in recent months, it has lost some of its prominent second-rung leaders, including former MPs A. Anwhar Raajhaa and V. Maitreyan, to the DMK. Nearly eight months have gone since the AIADMK and the BJP announced the revival of their relationship, yet they have not been able to attract any party with a considerable following to their side. If this situation continues, it is going to be difficult for the combine to take on the DMK-led front, which has been able to keep its flock together.

When the two parties an...

...ties on April 10, their proponents predicted that they would secure a vote share of 41%. The believed that both parties would retain their allies from the 2024 Lok Sabha elections through 2026 as well. It is now clear that the AIADMK is not going to get the support of all the constituents of the BJP-led National Democratic Alliance, which faced the electorate in April-May last year. One of the main reasons is that the Pattali Makkal Katchi, founded by S. Ramadoss in 1989, is heading towards a split. Mr. Ramadoss's year-long political rift with his son and former Union Health Minister Anbumani Ramadoss has only widened. The Election Commission's recent decision formally recognising Dr. Anbumani Ramadoss as the party president is likely to force the founder to chart his own course.

In the BJP, former State president K. Annamalai has often made remarks that have not been palatable either to the AIADMK or to Mr. Annamalai's successor, Nainar Nagenthran, who is keen on preserving ties with the AIADMK at least until the elections are over.

The Desiya Murpokku Dravida Kazhagam (DMDK), established by Vijayakant and now led by his wife Premalatha Vijayakant, seems to be keeping its options open despite having exited the alliance with the AIADMK that was formed early last year. As other allies are on the fringes, their addition to the ranks of the Opposition will not make much of a difference to the outcome.

Unless the Naam Tamilar Katchi, which secured a vote share of about 8% in 2024, or the TVK joins the Opposition – either of which appears to be a remote possibility – the DMK-led coalition seems firmly in the driver's seat

மேலும், அ.தி.மு.க.வின் துயரங்கள் தொடர்வதாகத் தெரிவித்துள்ள இக்கட்டுரை, அண்மைக் காலத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏ.அன்வர் ராஜா மற்றும் வி.மைத்ரேயன் உள்ளிட்ட அ.தி.மு.க. இரண்டாம் நிலைத் தலைவர்கள் பலர் தி.மு.க.வில் இணைந்துள்ளதையும் சுட்டிக்காட்டி உள்ளது.

அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி அறிவிக்கப்பட்டு, சுமார் 8 மாதங்கள் கடந்த பின்னரும், அக்கூட்டணியால் கணிசமான செல்வாக்கு உள்ள எந்தக் கட்சியையும் ஈர்க்க முடியவில்லை என்று குறிப்பிட்டுள்ள ‘தி இந்து’ நாளேட்டின் கட்டுரை, அ.தி.மு.க. கூட்டணியின் பலவீனம் நீடிப்பதால், வலுவான நிலையில் உள்ள தி.மு.க. தலைமையிலான கூட்டணியை எதிர்கொள்வது அ.தி.மு.க. கூட்டணிக்கு முடியாத காரியமாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

மேலும், தமிழ்நாட்டின் அரசியல் போக்கை தீர்மானிக்கும் இடத்தில் தி.மு.க. கூட்டணி வலுவாக உள்ளதாகக் குறிப்பிட்டுள்ள ‘தி இந்து’ கட்டுரை, தி.மு.க. உறுதியாக மீண்டும் ஆட்சி அமைக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

---

## டெல்லி காற்று மாசு:

# விவாதம் நடத்தாதது ஏன்?

## பிரியங்கா காந்தி கேள்வி!

*புதுடெல்லி, டிச. 4 -*

நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் தொடங்கியது.

முன்னதாக பிரதமர் மோடி கூறும்போது, “பிஹார் தோல்வி எதிர்க்கட்சிகளை தொந்தரவு செய்ததாகத் தெரிகிறது. விரக்தி மன நிலையில் இருந்து வெளியே வந்து அவர்கள் பணியாற்ற வேண்டும். நாடாளுமன்றத்தில் அவர்கள் நாடகமாடுகிறார்கள்” என்றார்

இந்நிலையில் பிரதமரின் பதிவுக்கு கருத்து தெரிவிக்க முடியாது என்று ராகுல் தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ள நிலையில் அதற்கு காங்கிரஸ் பொதுச் செயலர் பிரியங்கா பதிலடி கொடுத்துள்ளார்.



பிரியங்கா காந்தி தனது எக்ஸ் பக்கத்தில் கூறும்போது, “நாடாளுமன்றத்தை நடக்க விடாமல் எதிர்க்கட்சிகள் முடக்குவதாக பிரதமர் மோடி கூறுகிறார். டெல்லியில் காற்று மாசு, வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி (எஸ்ஐஆர்) ஆகியவற்றால் மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

---

## கரூர் கொடுந்துயரம்

# சி.பி.ஐ. விசாரணையை ரத்து செய்க!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு மனு!

புதுடெல்லி, டிச. 4 –

**கரூர் கொடுந்துயரம் தொடர்பான வழக்கில் சி.பி.ஐ. விசாரணையை ரத்து செய்யக் கோரி தமிழ்நாடு அரசுஉச்சநீதிமனற்ததில் பதில் மனு தாக்கல் செய்துள்ளது.**

கடந்த செப்டம்பர் 27ஆம் தேதி கரூர் வேலுசாமிபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டது. அதில் 11 குழந்தைகள் உள்பட 41 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இத்துயரச் சம்பவம் குறித்து ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையிலான ஒரு நபர் ஆணையத்தை தமிழ்நாடு அரசு அமைத்தது.

மேலும், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழுவும் அமைக்கப்பட்டு, விசாரணையை தொடங்கியது. இதற்கிடையே, கரூர் துயரச் சம்பவம் குறித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உச்சநீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றது.

இந்நிலையில், கரூர் கொடுந்துயரம் தொடர்பான வழக்கில் சிபிஐ விசாரணையை ரத்து செய்யக் கோரி தமிழ்நாடு அரசு உச்சநீதிமனறத்தில் பதில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளது. அதில், சிபிஐ விசாரணையை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் அமைத்த சிறப்பு புலனாய்வு குழு விசாரணையை தொடர அனுமதிக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு காவல்துறையின் விசாரணை சரியான திசையில் சென்று கொண்டிருந்ததாகவும் எந்த வகையிலும் பாரபட்சமின்றி விசாரணை நடத்தப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரூர் துயரம் தொடர்பாக அமைக்கப்பட்ட நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையிலான ஒரு நபர் ஆணையத்தின் விசாரணையை மீண்டும் தொடரும் வகையில் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசின் பதில் மனுவில் கோரப்பட்டுள்ளது. நீதியை நிலைநாட்டும் வகையில் நடுநிலையான ஒரு உத்தரவை உச்ச நீதிமன்றம் பிறப்பிக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசின் பதில் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## ‘டித்வா’ புயலால் பாதிப்பு:

# ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் இழப்பீடு!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.4-

தமிழகத்தில் டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர் என வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். மேலும், நீரில் மூழ்கி சேதமடைந்த விளை நிலத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு வழங்கப்படும் என்று அமைச்சர் அறிவித்தார்.

இதுகுறித்து அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய போது, “கனமழையால்தமிழகம் முழுவதும் 85,521.76 ஹெக்டேர் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது.

நீரில் மூழ்கி சேதமடைந்த விளை நிலத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.20,000 இழப்பீடு வழங்கப்படும். பயிர் பாதிப்பு கணக்கெடுப்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கணக்கெடுப்புக்கு பின்னர் உரிய நிவாரணம் வழங்கப்படும்.

நிவாரணத்தை உடனடியாக வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார். டிட்வா புயல் காரணமாக பெய்த கனமழையால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர். 582 கால்நடைகள் இறந்துள்ளன. 1,601 குடிசை வீடுகள் சேதமடைந்துள்ளன. மயிலாடுதுறை மற்றும் விழுப்புரத்தில் இருவர் மின்சாரம் தாக்கி இறந்துள்ளனர். தூத்துக்குடி மற்றும் தஞ்சாவூரில் சுவர் இடிந்து விழுந்து இருவர் இறந்துள்ளனர்.

அரசு மற்றும் தனியார் வானிலை ஆய்வு மைய கணிப்புக்குள் இந்த மழை வரவில்லை. சென்னையில் தோராயமாக 15 செ.மீமழை பெய்துள்ளது. சென்னையில் சாலைகளில் விழுந்த 27 மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. தூர்வாரும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## சென்னை – தண்டையார்பேட்டை – காமராஜர் நகரில் ரூ.39.30 கோடியில்

# தமிழ்நாடு அரசு அச்சகப் பணியாளர்கள் குடியிருப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, டிச.4-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2025) தலைமைச் செயலகத்தில், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்காக சென்னை, தண்டையார்பேட்டை, காமராஜர் நகரில் 39 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய 96 குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு அச்சகப் பணியாளர் குடியிருப்பினை திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2022-2023-ஆம் ஆண்டுக்கான எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மானியக் கோரிக்கையில், அரசு அச்சகப் பணியாளர்களுக்கு சென்னை, தண்டையார்பேட்டை - காமராஜர் நகரில் நவீன வசதிகளுடன் கூடிய குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னை, தண்டையார்பேட்டை, காமராஜர் நகரில் 39 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் 79,000 சதுரடி பரப்பளவில், 96 குடியிருப்புகளுடன், தரை மற்றும் ஆறு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு அச்சகப் பணியாளர் குடியிருப்பினை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, பணியாளர்களுக்கு குடியிருப்பு ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கினார்.

இக்குடியிருப்பின் தரைத்தளத்தில் வாகன நிறுத்துமிடம், மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்வுதளம், முதல் தளம் முதல் ஆறாம் தளம் வரை உள்ள ஒவ்வொரு குடியிருப்பும் தலா 450 சதுரடியுடன், குடியிருப்புகளுக்கு தேவையான மின் இணைப்பு, மின் தூக்கி வசதி, தீயணைப்பு உபகரணம், குடிநீர் வசதி, கழிவுநீர் இணைப்பு, உட்புற அணுகுசாலை, தெரு விளக்கு, சுற்றுச்சுவர் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் திருமதி.வெ.ஷோபனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# SIR : நாடாளுமன்றம் 2-வது நாளாக முடங்கியது!

**புதுடெல்லி, டிச. 4 -**

**வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நாடாளுமன்றத்துக்கு வெளியேயும், உள்ளேயும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



குளிர்கால கூட்டத் தொடரின் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பாக நாடாளுமன்றத்தின் மகர் துவார் பகுதியில் இண்டியா கூட்டணி எம்பிக்கள், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு (எஸ்ஐஆர்) எதிர்ப்பு தெரிவித்து கோஷங்களை எழுப்பினர்.

பிஹாரைத் தொடர்ந்து 12 மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் எஸ்.ஐ.ஆர். பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் வாக்குத் திருட்டில் ஈடுபடக்கூடாது என்றும் அவர்கள் வலியுறுத்தினர். இதை வலியுறுத்தும் வகையில் கைகளில் பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் கோஷங்களை எழுப்பினர். இண்டியா கூட்டணி எம்பிக்களின் இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மூத்த தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

போராட்டம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்பி மாணிக்கம் தாகூர், “எஸ்.ஐ.ஆர். குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும். வாக்களிக்கும் உரிமை ஆபத்தில் இருப்பதால், இந்த முக்கிய பிரச்சினையில் இருந்து அரசு விலகி ஓடக்கூடாது. பிஹாரில் 62 லட்சம் வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டனர். தற்போது 12 மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர். நடத்தப்படுகிறது.

எஸ்.ஐ.ஆர். பணிகளை மேற்கொள்வதால் எழுந்துள்ள கூடுதல் அழுத்தம் காரணமாக ஏராளமான பி.எல்.ஓ.க்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்தியாவின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க இது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட வேண்டும்.” என வலியுறுத்தினார்.

காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரும் எம்பியுமான திக்விஜய் சிங், “நாங்கள் எப்போதும் எஸ்ஐஆர்க்கு ஆதரவாகவே இருக்கிறோம். எஸ்ஐஆர் ஏற்கெனவே நடந்துள்ளது. அப்போது, 2 முதல் 4 மாதங்களுக்கு அது நடக்கும். அதோடு, அது ஒவ்வொரு குடிமகனின் வாக்குகளையும் பதிவு செய்வதற்கான ஒரு செயல்முறையாக இருந்தது. வாக்காளர்கள் எந்த படிவங்களையும் நிரப்பவில்லை.

பிஎல்ஓ வந்து கேட்பார், நாங்கள் தகவல் கொடுப்போம். எங்கள் வாக்கு சேர்க்கப்படும். ஆனால், இந்த எஸ்ஐஆர் என்பது படிவத்தை நிரப்பி, இந்திய குடிமகன் என்பதற்கான ஆதாரத்தை இணைக்கக் கோருகிறது. இது உண்மையில் எஸ்.ஐ.ஆர். அல்ல. இது சி.ஏ.ஏ. எனவேதான் நாங்கள் இதை எதிர்க்கிறோம்.” என தெரிவித்தார்.

நாடாளுமன்ற மக்களவை காலை 11 மணிக்குக் கூடியதும், மக்களவையின் மையப் பகுதிக்கு வந்த எதிர்க்கட்சி எம்.பி.க்கள், எஸ்.ஐ.ஆர். குறித்து விவாதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டனர். தொடர் அமளி காரணமாக அவையை பகல் 12 மணி வரை அவைத் தலைவர் ஓம் பிர்லா ஒத்திவைத்தார். மீண்டும் அவை கூடிய போதும் அமளி நீடித்ததால் தற்போது மதியம் 2 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களவை காலை 11 மணிக்கு சி.பி. ராதாகிருஷ்ணன் தலைமையில் கூடியது. அப்போது, விதி எண் 267ன் கீழ் 21 நோட்டீஸ்கள் பெறப்பட்டுள்ளதாகவும் எனினும், அவை நிராகரிக்கப்பட்ட தாகவும் சி.பி. ராதாகிருஷ்ணன் அறிவித்தார். இந்த அறிவிப்பை அடுத்து எதிர்க்கட்சி எம்பிக்கள் எஸ்.ஐ.ஆர். குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். இதனால், மாநிலங்களவை மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவித்தார்.




தேர்தல் ஆணையத்தின் எஸ்.ஐ.ஆர். பணிகளுக்கு எதிராக, நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியாகாந்தி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பட்டத்தில் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி, திமுக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை திமுக குழுத் தலைவர் திருச்சி சிவா மற்றும் ஆ.ராசா உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் கலந்து கொண்டு எஸ்.ஐ.ஆர்.,க்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.